T.C-036

**012/DM/23**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## TRANSLATION TEST – SECOND PAPER – TRANSLATION OF NEWS PAPER REPORT IN TAMIL TO ENGLISH

(Without Books)

Maximum Time : 2.30 hours                                                                 Maximum Marks : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.

(4 × 25 = 100)

1. Translate the following into English.

பல்லவர்களின் கண்ணைக் கவரும் சிற்பங்களுக்கு பிரசித்தி பெற்ற மாமல்லபுரம் நகரம், உலகின் பிரபலமான செஸ் ஒலிம்பியாட் திருவிழாவுக்கு கோலாகலமாக தயாராகி வருகிறது. பழங்காலத்தில் துறைமுக நகராகத் திகழ்ந்த மாமல்லபுரத்தில் பல்லவர்கள் ஆட்சி காலத்தில் கட்டப்பட்ட கடற்கரைக்கோயில், அர்ச்சுனன் தபஸ், புலிக்குகை, கலங்கரை விளக்கம் உள்பட பல்வேறு சிற்பங்கள் நினைவுச் சின்னங்களாகத் திகழ்கின்றன. இந்த நினைவுச் சின்னங்களை யுனெஸ்கோவும் பாரம்பரிய சின்னங்களாக அங்கீகரித்துள்ளது. தமிழகத்துக்கு வரும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் தவறாமல் காண விரும்பும் இடம் மாமல்லபுரம். நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் மாமல்லபுரத்தைக் காண வருவது வழக்கம்.

இந்தியாவிலேயே உருவாகி, தற்போது உலகம் முழுவதும் ஆடப்பட்டு வரும் விளையாட்டு செஸ் என்கிற சதுரங்கம் தான். ஒலிம்பிக் போட்டியில் செஸ்ஸுக்கு அனுமதி தரப்படாததால், தனியாக செஸ் ஒலிம்பியாட் போட்டியை சர்வதேச செஸ் கூட்டமைப்பு (ஃபிடே) நடத்தி வருகிறது. 1927 ஆம் ஆண்டு முதல் நடத்தப்படும் இந்தப் போட்டி இந்தியாவில் முதன்முறையாக (44-வது செஸ் ஒலிம்பியாட்) மாமல்லபுரத்தில் ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 10 ஆம் தேதி வரை நடக்கிறது. ரஷியாவில் செஸ் ஒலிம்பியாட் போட்டி இருந்தது. உக்ரைன் மீதான படையெடுப்பால், அங்கிருந்து நீக்கியது ஃபிடே. இதையடுத்து பல்வேறு நாடுகள் கௌரவமிக்க இப்போட்டியை நடத்த போட்டி போட்டன. அகில இந்திய செஸ் சம்மேளனமும், முன்னாள் உலக சாம்பியன் விஸ்வநாதன் ஆனந்த் உதவியுடன் இந்தப் போட்டியை இந்தியாவில் நடத்த முயற்சி மேற்கொண்டது. "இந்திய செஸ்ஸின் மெக்கா" எனப்படும் சென்னையில் இந்தப் போட்டியை நடத்த முதல்வர் மு.க. ஸ்டாலின் முன் வந்தார். தமிழக அரசே போட்டிக்கான பிரதான ஸ்பான்ஸராக இருக்கும் என உறுதி கூறினார். இதையடுத்து ஃபிடே அமைப்பு போட்டியை நடத்தும் இடமாக சென்னையை அறிவித்தது.

**[Turn over**

2. Translate the following into English.

நாட்டின் 15 வது குடியரசு தலைவர் தேர்தல் கடந்த ஜுலை 18 ம் தேதி நடந்தது. தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் நிறுத்தப்பட்ட திரவுபதி முர்மு வெற்றி பெற்றார். ஒடிசா மாநிலத்தை சேர்ந்த திரவுபதி முர்மு, பழங்குடியின வகுப்பை சேர்ந்தவர். இவர், இந்தியாவின் முதல் பழங்குடியின பெண் குடியரசு தலைவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

ஒரு சாதாரண கவுன்சிலராக தனது அரசியல் வாழ்க்கையை துவங்கிய திரவுபதி முர்மு, 2 முறை ஒடிசா மாநில சட்டமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார். அம்மாநில வர்த்தகம் மற்றும் போக்குவரத்து துறை அமைச்சராகவும், அதைத் தொடர்ந்து மீன்வளம் மற்றும் விலங்குகள் நல மேம்பாட்டுத் துறை அமைச்சராகவும் பதவி வகித்தார்.

இவர், ஜார்க்கண்ட் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டதன் மூலம், ஒடிசாவிலிருந்து ஆளுநராக நியமிக்கப்பட்ட முதல் பெண் மற்றும் முதல் பழங்குடியின ஆளுநர் என்ற பெருமையை பெற்றார். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின், முதல் பெண் ஜனாதிபதியாக பிரதிபா பாட்டீல் (12-வது ஜனாதிபதி) கடந்த 2007-ம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டர். தற்போது, இரண்டாவது பெண் ஜனாதிபதி என்ற பெருமை முர்முவுக்கு கிடைத்துள்ளது. கல்வி, சமூகம், பொருளாதாரம் போன்றவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையில் பழங்குடி சமூகத்தினர் இருந்த போதிலும், தேசத்தின் உச்ச பதவியை திரவுபதி முர்மு அடைந்திருப்பது அதிகாரத்தை நோக்கிய பழங்குடி சமூகத்தினரின் பயணத்தில் ஒரு மைல் கல் ஆகும்.

3. Translate the following into English.

தென்மேற்கு பருவமழைக்கு மூன்று முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவது, கரீஃப் பயிர்களின் மகசூலுக்கு, குறிப்பாக நெல் பயிருக்கு, போதுமான பருவமழை அவசியம். அதன்மூலம் தான் உணவுப் பொருள்களின் விலை மட்டுப்படும் என்பது மட்டுமல்லாமல், இந்தியாவின் உணவுப் பாதுகாப்பும் உறுதிப்படும். கடந்த மார்ச் மாதத்தில் காணப்பட்ட வெப்ப அலையால் கோதுமை விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் இப்போதைய பருவமழையின் மூலம் குளிர்கால கோதுமை மகசூல் உறுதிப்படக்கூடும். இரண்டாவது, கொள்ளை நோய்த்தொற்று இந்தியப் பொருளாதாரத்தை புரட்டிப் போட்ட போது பெரும்பாலானோருக்கு வேலை வாய்ப்பையும், இந்தியாவின் உணவுத் தேவையையும் வழங்கியது விவசாயம் தான். ஊரகப்புற பொருளாதாரத்தின் அடிப்படை விவசாயம் எனும் நிலையில், பருவமழைப் பொழிவில் ஏற்படும் குறைவு உணவுப் பொருள் உற்பத்தியை பாதிப்பது மட்டுமல்லாமல், ஊரகப்புற வருமானத்தையும் பாதிக்கும். அதனால், தென்மேற்கு பரும மழை எப்போதுமே எதிர்பார்க்கப்படுகிறது. மூன்றாவது, உலக அளவில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. உக்ரைன் பிரச்சனை உணவு உற்பத்தியை மட்டுமல்ல, உணவுத் தேவையையும் பாதித்திருக்கிறது. பல நாடுகளில் அடிப்படைத் தேவைக்கான அரிசி, கோதுமை, பார்லி போன்றவற்றுக்கு தட்டுபாடு ஏற்பட்டிருப்பது உணவுப் பொருள்களின் விலையைக் கடுமையாக அதிகரித்திருக்கிறது. இந்தியாவில் தென்மேற்கு பருவ மழையால் உணவு உற்பத்தி உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே நம்மால் நிலைமையை சமாளிக்க முடியும்.

4. Translate the following into English.

காய்ச்சல், முகத்தில் தொடங்கி உடலில் பரவக் கூடிய கொப்புளங்கள், தலைவலி, தசைப்பிடிப்பு, உடல் சோர்வு, தொண்டை புண், இருமல் போன்றவை குரங்கை அம்மை பாதிப்பின் அறிகுறிகள். இதனால் கண்வலி அல்லது பார்வை மங்குதல், மூச்சுத் திணறல், நெஞ்சுவலி, மூச்சுவிடுதலில் சிரமம், வலிப்பு, கடுமையான உடல் சோர்வு போன்ற பாதிப்புகள் ஏற்படும். இது, பொதுவாக 2 முதல் 4 வாரங்களுக்கு நீடிக்கும் நோய்த்தொற்று பாதிப்பு.

ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள், ரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற இணை நோய் பாதிப்பு உடையவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள் ஆகியோர் இந்த நோய்த் தொற்றால் அதிகம் பாதிக்கப்படக்கூடும். நீண்ட நாள் நெருங்கிய தொடர்பு உடையவர்களின் பெரிய சுவாசத்துளிகள் வாயிலாகவும், தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பரவும் தன்மை கொண்டது இந்த தொற்று. கரோனா பாதிப்பு ஏற்பட்டால் எப்படி தனிமைப்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறதோ, அதே போன்றுதான் குரங்கு அம்மை வைரஸால் பாதிக்கப்பட்டவர் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது. பாதிக்கப்பட்டவர் பயன்படுத்தும் துணிகள், படுக்கைகள் உள்ளிட்ட எந்தப் பொருளையும் மற்றவர்கள் தொடுவதைத் தவிர்த்தல் நோயாளியின் மூக்கையும், வாயையும் மறைக்கக் கூடிய முகக் கவசத்தைப் பயன்படுத்துதல், நோயாளியின் தோலில் இருந்து உதிரக் கூடிய சொறியை தூய்மையான துணி கொண்டு அப்புறப்படுத்துதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது.

---